1970 மார்ச் 23]

(ஆ) நில உச்சவரம்புக் குறைப்பை எதிர்த்து நிலவுடைமையாளர்கள் நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. அ. சுப்பராஜா அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவாரூரில் நில உடமையாளர்கள் கூடி, நில உச்சவரம்புக் குறைப்பை சட்டமாகக் கொண்டு வருவதற்கு முன்பு, அவர்களைக் கலந்துகொள்ளாத காரணத்தைச் சுட்டிக்காட்டி, இனி அவர்கள் நிலவரி கொடுப்பதில்லையெனவும், குறுவைப் பயிரிடுவதை நிறுத்தி விடுவதெனவும் முடிவு செய்ததினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளையும் பற்றி விவாதிக்க என்றும் அதை விவாதிப்பதற்காக சபையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்க வேண்டுமென்றும் கொடுத்து இருக்கிறார்கள்.

இதுவும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினாலே அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) ஆரணியாறு ரிசர்வாயரின் நீர்ப்பங்கீடு குறித்து தமிழ்நாடு—ஆந்திர மாநிலங்களிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'The dispute that has arisen between Tamil Nadu and Andhra Pradesh regarding the sharing of irrigation water from Araniyar Reservoir consequent to the implementation of the Pataskar Award' என்று திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இதுவும் அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினால், இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

4. அமைச்சரின் விளக்க உரை.

தமிழ்நாடு பரிசுச் சீட்டின் புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவை விதி 82-ன் கீழ் இப்பேரவைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் 19-வது குலுக்கல் 1970 ஏப்ரல் திங்களில் நடத்தப்படும். குலுக்கல் தேதி 30-4-70 வியாழக் கிழமை, ஏப்ரல் மாதம் தமிழ்ப் புத்தாண்டு நாளோடு இணைந்த மாதம். எனவே இந்தக் குலுக்கலில் சில ஈடு இணையற்ற சிறப்புப் பரிசுகளைத் தர அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சிறப்புப் பரிசுகள் ஏற்கனவே ஒவ்வொரு தொடருக்கும் உள்ள ரூ. 3,50,000 பரிசுகள் தவிர கூடுதலாகத் தரப்படும் பரிசுகளாகும். இந்தக் குலுக்கலில் 10 தொடர்களை (EL முதல் EU வரை) வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொடருக்கு ரூ. 3,50,000 வீதத்தில், அந்த 10 தொடர்களுக்கும் வழக்க மான ரூ. 35,00,000 பரிசுகள் உண்டு. அத்துடன் இந்த 10 தொடர் களுக்கும் பொதுவாக ரூ. 25,00,000 மதிப்பில், கீழ்க்கண்ட 7 சிறப்புப் பரிசுகள் இருக்கும்.

	ரூ.
ஒரு முதல் சிறப்புப் பரிசு	10,00,000
ஒரு இரண்டாவது சிறப்புப் பரிசு	5,00,000
ஐந்து மூன்றாவது சிறப்புப் பரிசுகள் .. ஒவ்வொன்றும் ரூ. 2,00,000 வீதத்தில்	10,00,000
ஆக 7 சிறப்புப் பரிசுகள் ..	25,00,000

ஆக மொத்தத்தில் இந்த குலுக்கலில் ரூ. 60,00,000 பரிசுத் தொகையாக வழங்கப்படும். ஏஜெண்டுகள், வழக்கமான பரிசுகளுக்குப் பெறும் 10 சதவீதம் போனசுடன், இந்த சிறப்புப் பரிசுகளுக்கு 5 சத வீதம் போனஸ் பெறத் தகுதியுள்ளவர்களாவர். மேற்கூறப்பட்ட சிறப் புப் பரிசுகளைக் கவனத்தில் கொண்டு, அரசு பரிசுச் சீட்டின் விலையினை ரூ. 2 என்று நிர்ணயித்து உள்ளது.

1970 மார்ச் 27-ந் தேதி எல்லா உப கருவூலங்களுக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கும்படியும், அதன்பின் பொது மக்களுக்கு விற்பனை செய்ய வசதியாகவும் பரிசுச் சீட்டுக்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி, புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் மூலம் கிடைக்கும் தொகை "தமிழ்நாடு சிறப்பு நல நிதி" யில் சேர்க்கப்பட்டு, மருத்துவ வசதிகள் அளிக்கவும் விரிவுபடுத் தவும், தொடக்கப்பள்ளி கட்டடங்கள் கட்டவும், குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கவும், மற்றும் அரசினால் ஒப்புதலளிக்கப்படும் பிற வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுமென்பதை இம்மன்றத்தின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். பல புதிய பரிசுகளைப் பெறக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு அளிக்கும் இப்பரிசுச் சீட்டுத் திட்டம் ஆக்கப் பணிகளுக்கு அதிக வசதிகளைப் பெருக்கித் தருகிறது என்பது இப்புதிய ஏற்பாட்டில் நன்கு தெளிவாகிறது. ஆகவே எல்லா மக்களாலும் இந்த மன்றத்தாலும் இத்திட்டம் வரவேற்கப்படும் என நம்புகிறேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு பரிசுச் சீட்டின் புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் குறித்த அறிக்கை, பத்திரிக்கைகளில் வந்த பிறகு அவைக்கு அறிவிக்கப்படுதல்

திரு. கே. விநாயகம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆடர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் ஆர் கிளாரிபிகேஷன்?

திரு. கே. விநாயகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டங்களைப் படித்தார்கள். அவை கூடிக் கொண்டிருக்கிறது, ஒன்றரை மாதமாகக் கூடியிருக்கிறோம். இந்தச் சிறப்புத் திட்டங்கள் பற்றிய விபரம் பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. அவை கூடியிருக்கும் பொழுது இப்படிப்பட்ட சிறப்புத் திட்டங்களைக் கொண்டுவரப் போகிறோம் என்று முதலிலே பத்திரிகையிலே கொடுத்துவிட்டு இங்கு வந்து டீடெய்ல்ஸ் கொடுப்பது இந்தச் சபையை அவமானப்படுத்துவது ஆகாதா? பத்திரிகையிலே புதிய அம்சங்கள் எல்லாம் வரப்போகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கு வந்து டீடெய்ல்ஸ் சொல்லி யிருக்கிறார்கள். பத்திரிகையிலே சிறப்பு அம்சங்கள் வரப்போகிறது என்று அறிக்கை கொடுத்ததைப் படித்தேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சிறப்பு அம்சங்கள் இருக்கும் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்றுதான் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அதிலே முடிவு எடுத்த உடனே இந்த மன்றத்திற்குச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேதான் இப்போது அந்த விவரங்களைச் சொன்னேன். இல்லாவிட்டால் நாளைக்குப் பத்திரி கையிலே வந்த பிறகு பார்த்துக்கொள்ளும் நிலைதான் இருக்கும். இதற்கு முன்னால் சொல்லப்பட்ட விஷயம் சிறப்புப் பரிசுகள் கொடுப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதுதான். அதிலே முடிவு எடுத்த சில விநாடிகளுக்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது.